★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
EELANADU

Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஐப்பசி 10 ஜுல்ஹஜ் 5 இதழ் 257
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-10-79

தரத்தில் நிகரற்ற
மான்
வரிக்குதிரை, முயல், விளக்கு, செவன மார்க் ஓடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம், 36, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7493

## கிரிக்கெட் டெஸ்ட்
## ஆஸி—2|227

(கல்கத்தா)
இன்று நடைபெறும் இந்திய-அவுஸ்திரேலிய 5வது கிரிக்கெட் டெஸ்ட்டின் முதலாவது நாளான நேற்று ஆட்டநேர இறுதிவரை அவுஸ்திரேலியா இரண்டு விக்கட்டுகள் இழப்புக்கு 227 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டேர்லிங்—114 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். கிக்ஸ்—45 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருக்கிறார்.

இந்திய வீரர் கபில்தேவ் தனது முதலாவது பந்திலேயே விக்கட்டினை ஆட்டமிழக்கச் செய்தது நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சமாகும். (ரு)

# இந்திய இடைத்தேர்தல்
# ஜனவரி முதல் வாரத்தில்

## முடிவுகள் 7ல் வெளிவரும்

(புதுடில்லி)
இந்தியப் பாராளுமன்ற (லோக சபை) இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ம் திகதியும் 6ம் திகதியும் நடைபெறும்.

3ம் திகதி வாக்குப் பதிவுகள் நடைபெறும் தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் அன்றே மாலையே எண்ணப்பட்டு அறிவிக்கப்படும். 6ம் திகதி நடைபெறும் வாக்குப்பதிவு மறுநாள் எண்ணப்பட்டு அறிவிக்கப்படும்.

இத்தகவல்களைத் தெரிவித்த இந்திய தேர்தல் கமிஷனர் திரு. எஸ். எல். சக்தர் சில மாநிலங்களில் ஒரேநாளில் தேர்தல் நடைபெற்றுவிடும் என்றும் எந்தெந்த மாநிலங்களில் ஒரேநாளில் தேர்தல் முடிவடையும் என்பதுபற்றி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை'' என்றும் கூறினார்.

தேர்தலுக்கான வேட்புமனுக்களை டிசம்பர் மாதம் 10ம் திகதியும் மறுநாளும் தாக்கல்செய்யலாம் என்றும் வாபஸ்பெற விரும்புவோர் 13ம் திகதிக்கு முன்னர் அறிவிக்கவேண்டும்'' என்றும் தேர்தல் கமிஷனர் அறிவித்தனர்.

544 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய நடைபெறும் இத்தேர்தல் பற்றி அண்மையில் நடாத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பின் பிரகாரம் இந்திரா காந்தியே முன்னணியில் நிற்பது குறிப்பிடத்தக்கது. (ரு)

யாழ் ரயில் நிலையத்திலிருந்து
## 4 உதவி அதிபர்கள் திடீர் இடமாற்றம்
### ஊழியர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)
யாழ். ரயில் நிலையத்தைச் சேர்ந்த நான்கு உதவி புகையிரத நிலைய அதிபர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது இடமாற்றங்களுக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் இந்த இடமாற்றம் குறித்து ரயில்வேப் பகுதி ஊழியர்கள் அதிருப்தியும் கவலையும் அடைந்திருப்பதாகவும் ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திடீர் நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்ட ஊழியர்கள் ரயில்வேப் பகுதி தலைமை அலுவலகத்திற்கும் தொழிற்சங்க தலைமைப்பீடத்திற்கும் புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது.

(6ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர் இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் டாக்டர் ஹோவாட் ரிச்சேர்ட் இன்று காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகிய

(6ம் பக்கம் பார்க்க)

அருள்மிகு சிறுப்பிட்டி
செல்லப்பிள்ளையார் கோவில்
திருப்பணி நிதிக்காக
பிரபல தென்னிந்திய திரைப்பாடகர்
கலைமாமணி T.M. சௌந்தரராஜன்
S. லலிதா குழுவினரின்
இன்னிசைக் கச்சேரி
இடம்: கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானம்
காலம்: 28-10 79 ஞாயிறு மாலை 6-00
இடம்: துரையப்பா விளையாட்டரங்கு
காலம்: 29.10 79 திங்கள் மாலை 6-00
டிக்கட்டுகள்:
நுழைவாசல்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3930

## பிரிட்டனின் புதிய தூதுவர்



(கொழும்பு)
இலங்கைக்கு பிரிட்டனின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜோன் நிக்கலஸ் சீ. எம். ஜீ.

## கராஜ் உரிமையாளர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)
அனுமதிப்பத்திரமின்றி "றிவால்வர்" ஒன்றையும் சுடக்கூடிய பாவிக்கும் ஆறு குண்டுகளையும் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில், எதிரி தாம் வேலிமுறையில் செய்யப்போவதாக தெரிவித்தமைத் தொடர்ந்து 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி வழக்கில்

(6ம் பக்கம் பார்க்க)

## எதிரிகளுக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)
கடந்த பொதுத்தேர்தலின் போது ஆள்மாறாட்டம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

யாழ் முஸ்லீம் வட்டாரத்தைச் சேர்ந்த மீரான் சாகிப்

(6ம் பக்கம் பார்க்க)

## இருதயத் துடிப்பைக் கவனிக்கும் கருவி பல வருடங்களாகப் பழுதடைந்த நிலையில்
### இளம்பெண்ணின் மரணவிசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)
யாழ். பிரதான வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் சத்திரசிகிச்சையின் போது இருதயத் துடிப்பைக் கவனிக்கத் தேவையான இரு கருவிகளில் ஒன்றுதான் உண்டு. அதுவும் பலவருடங்களாக பழுதடைந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

கடந்த 24ம் திகதி சத்திர சிகிச்சை செய்யப்படும்போது காலமான விராவி வடக்கைச் சேர்ந்த தயாநிதி கண்மணி (வயது 30) யின் மரண விசாரணையின்போது இத்தகவல் தெரியவந்துள்ளது.

கடந்த 3 மாதமாக நெஞ்சடைப்பு நோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கடந்த 4-ம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். 24ம் திகதி சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அப்போது இவரது இதயத்துடிப்பை அவதானிக்க

(6ம் பக்கம் பார்க்க)

பிரஸ்டீஜ் ருசி தேயிலை
மணத்திலும், சுவையிலும் பார்வையிலும் மிகச்சிறந்தது
சகல பெயர்பெற்ற வியாபாரிகளிடமும், கூட்டுறவு கடைகளிலும் கிடைக்கும்
பிரஸ்டீஜ் மார்கட்ஸ் லிமிட்டெட்.
109, மிகிந்து மாவத்தை, கொழும்பு-12.
தொலைபேசி: 20307.
வடபகுதியில் தொடர்புக்கு:
52, பலாலி வீதி,
கோண்டாவில்.
(952)

# "ஈழநாடு"

## இந்திய தேர்தல் போட்டி

## 5000 ரூபாவை

**பணமாகவும், பரிசுகளாகவும் வழங்குகின்றோம்!**

1-ம் பரிசு.........ரூ. 500-00

2-ம் பரிசு.........ரூ. 300-00

3-ம் பரிசு ......ரூ. 300-00

### இவற்றுடன்

நாலாயிரம் ரூபா பெறுமதியான இருபத்தேழு கவர்ச்சிமிகு பரிசுகளும் உங்களைக் காத்திருக்கின்றன!

யார், யார் என்ன பரிசுகள் வழங்குகின்றார்கள்?

பெறுமதி வாய்ந்த பரிசுகளைக் கொண்ட 'பரிசு மூட்டை'யை ஒருதரம் இங்கே 'அவிழ்த்து'க் கொட்டுகின்றோம், அவதானியுங்கள்!

### 1-ம் பரிசு:

நியூ பிளுக்ஸ் கம்பனி லிமிட். (யாழ். கிளை) வழங்கும் ரூ. 500 பெறுமதியான சேமிப்பு முதலீட்டு வவுச்சர். அல்லது அவர்களின் சந்தைப்படுத்தும் பகுதியில் 500 ரூபாவுக்குப் பெறுமதியான பொருள்கள். இவற்றில் ஒன்றை முதற்பரிசு பெறுபவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

### 2-ம் பரிசு:

எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) ஸ்தாபனத்தார் முந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வழங்குகின்றார்கள்.

### 3-ம் பரிசு:

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள கே. கே. வி. யாழ்ப்பாண நகை மாளிகை ஸ்தாபனத்தாரும், யாழ். ஸ்டான்லி வீதியிலுள்ள கலை சன்ஸ் ஸ்தாபனத்தாரும் இணைந்து முந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வழங்குகின்றனர்.

இம்மூன்று பரிசுகளைத் தவிர்ந்த நாலாயிரம் ரூபா பெறுமதி பெறும் ஏனைய இருபத்தேழு கவர்ச்சி மிகு ஆறுதல் பரிசுகளும், அவற்றை வழங்கும் யாழ்ப்பாண வர்த்தகப் பிரமுகர்களும் வருமாறு!

(1) எஸ் சுலைமான் கண்டு அன்ட் பிறதர்ஸ் - மின்னியக்க சவரக் கருவி, (2) டிக்கா வாச் வேர்க்ஸ் - மேசை மணிக்கூடு, (3) நியூவிக்ரேர்ஸ் - வாசுனெலி, (4) எ ரோ எலெக்றிக்கல்ஸ் - மின் ஸ்கிரூலேட்டர், (5) ரவர் கோப்பி பார் - ஆறு எவர்சில்வர் கோப்பைகள், (6) தாமோதர விலாஸ் - மின்சார இஸ்திரிக்கை, (7) நியூட்டோன் எலெக்றிக்கல்ஸ் - மின் அடுப்பு, (8) எக்மோ ஸன்ஸ் - மின் மேசை விளக்கு, (9) அன்று சேப்பி - வெள்ளித்தட்டு, (10) மகேசியன் ரெக்கோடிங் சேர்விஸ் - பாடல்கள் பதிவு பெற்ற மூன்று கசெற்றுகள், (11) விமாஸ் - தேநீர் செற், (12) முகமதலி அம்துவன் - வெள்ளித்தட்டம், (13) கணேசன் ஸ்ரோர்ஸ் - சிங்கப்பூர் தலைக்குசேலை, (14) பாரதி ஸ்ருடியோ - பெரிய அளவிலான வெளிநாட்டு 'அல்பம்' (15) சுப்பறூஸ் - சிங்கப்பூர் தைலக்குசேலை, (16) செ. சிவபாத விங்கம் - ஒருசோடி குத்து விளக்கு, (17) றிஸ்பன் டெயிலறிங் மார்ட் - 80x20 ஷேர்ட், (18) ஜெஸிமா பிக்சர் பலஸ் - குளியலறைக் கண்ணாடி, (19) எம். ரி. ஆர். பிலிம்ஸ் - நூறு ரூபா ரொக்கப் பணம், (20) கிருபா கில்ட் ஹவுஸ் - பெறுமதி வாய்ந்த பரிசுப் பொட்டலம், (21) நாதன் ஸ்ரோர்ஸ் - நூறு ரூபா ரொக்கப் பணம், (22) ஆ. க. கனக சபாபதி அன்ட் சன்ஸ் - நூறு ரூபா ரொக்கப்பணம், (23) கே. என். எம். மீருன் சாஹிப் - எவர் சில்வர் பாத்திரங்கள், (24) வி. கே. ராஜரத்தினம் - மின்சார மேசை விளக்கு, (25) மலாயன் றேடியோ சேர்விஸ் - மின்சார மேசை விளக்கு, (26) செ. சண்முகராஜா பிறதர்ஸ் - மூன்று டின் கனேடியன் மோல்டோவா, (27) வைக்வே ஏஜன்ஸீஸ் - சோடி குத்துவிளக்கு.

இந்தப் பரிசுகளைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் இந்தியத் தேர்தல் கூப்பனிலுள்ள கேள்விகளைப் படித்து, ஊகித்து சரியான விடைகளை "போல்பொயின்ற்" பேனாவால் எழுதி கத்தரித்து எமக்கு அனுப்பிவையுங்கள். கூப்பனை தபால் அட்டையில் ஒட்டி அனுப்புவது உங்களுக்கும் கெளகரியம், எமக்கும் உதவியாக இருக்கும். ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும் ஒவ்வொரு கூப்பன் இணைக்கப்பட வேண்டும்.

"ஈழநாடு" பத்திரிகையில் அடிக்கடி வெளிவரும் இந்தியத் தேர்தல் பற்றிய கட்டுரைகளைப் படியுங்கள். அவை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

உங்களது கூப்பன்களை நீங்கள் "ஈழநாடு" அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் பெட்டியில் நேரில் வந்தும் போடலாம். முந்துங்கள். முடிவு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

---

பாடசாலையில் - மாணவர் முன்பாக

# ஆசிரியையின் சங்கிலியை அறுத்துஓடிய 'பலேஆசாமி!'

## ஒன்றரை மைல்தூரம் துரத்திச்சென்று மடக்கிப்பிடித்தார் தொழிலாளி!

(நாவலப்பிட்டி)

பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்த ஒரு ஆசிரியையின் தங்கச்சங்கிலியை பாடசாலை மாணவர்கள் முன்னிலையிலேயே அறுத்துக்கொண்டு ஓடிய ஆசாமியை, தொழிலாளர்கள் துரத்திச்சென்று பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

ஆயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்தவர், உருகிபராவைச்சேர்ந்த செல்வி நிர்மலாதேவி தம்பிராசா ஆகும்.

இதுபற்றித் தெரியவருவதாவது!

நாவலப்பிட்டியிலிருந்து ஏழு மைல் தூரத்திலிருக்கும் ஈஸ்ட்ஹொல்லே தமிழ்ப்பாடசாலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. குறிப்பிட்ட ஆசிரியை தினமும் நாவலப்பிட்டியிலிருந்து 'பஸ்' மூலம் போய்வருவது வழக்கம். இவர் ஒருவர் மட்டுமே அங்கு படிப்பிக்கும் ஆசிரியை.

சம்பவதினமன்று இப்பாடசாலை நேரத்தில் இருவர் திடீரெனப் பிரவேசித்து சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினர். திருடனைப் பிடிக்குமாறு கூக்குரல் எழுப்பினார் ஆசிரியை, மாணவர்களும் சத்தமிட்டனர். இக்கூக்குரலைச் சற்றுத் தொலைவில் தேயிலைக்கொழுந்து பிடுங்கிக் கொண்டிருந்த தொழிலாளருக்கும் கேட்டது. உடனேயே தொழிலாளர்கள் இரண்டு திருடர்களையும் துரத்தினார்கள்; ஒன்றரை மைல் தூரம் ஓடி, ஒருவனை மட்டும் துரத்திப் பிடித்தனர். மற்ற ஆசாமி தலைமறைவாகிவிட்டான்.

பாக்கலந்த தோட்டத்தைச் சேர்ந்த ஐசக் என்பவனே பிடிக்கப்பட்டு கம்பளைப்பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டான். தங்கச் சங்கிலி அவன் வசமில்லை. சகானந்தன் எனப்படும் மற்றவனைப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

பட்டப்பகலில் துணிச்சலுடன் பாடசாலை ஆசிரியையின் சங்கிலியை அறுத்த சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிடிபட்ட ஆசாமி சுமார் இருபது அடி பள்ளத்தில் குதித்து தப்பியோட முயன்ற போதிலும் துரத்திச் சென்ற தொழிலாளியோ தன் உயிரையும் மதியாது தானும் அதே பள்ளத்தில் குதித்து ஆசாமியை மடக்கிப் பிடித்ததைத் தோட்டத் தொழிலாளர், உத்தியோகத்தர்கள் பாராட்டியுள்ளனர்.

---

### அடையாளம் காணப்பட்டது

(கல்கத்தா)

கல்கத்தாவில் நடைபெற்ற ரயில் விபத்தில் பலியானவர்களின் 23 சடலங்களில் இதுவரை 20 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது. (ரு)

---

## சோவியத் யூனியனில் சட்டமும் முஸ்லிம்களும்

### மதவிவகார சபைத்தலைவர் விளக்கம்

மாஸ்கோ, அக் 26

"சோவியத் சட்டத்திற்கிணங்க, சோவியத் யூனியனிலுள்ள பிற ஆத்திகர்களைப் போலவே, முஸ்லிம்களும் தமது மதத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக குழுக்களாகவோ அல்லது சங்கங்களாகவோ அமைத்துக் கொள்ளலாம். இந்த மதச்சங்கங்கள், அரசாங்கத்தால் பாதுகாக்கப் பெறுகின்றன; தேவையான சட்டம் சார்ந்த உரிமைகளும் அவற்றுக்கு உண்டு" என்று சோவியத் அமைச்சரவையின் கீழுள்ள மதவிவகாரக்குழுவின் தலைவர் வி. குரயேதோவ் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

"இப்பொழுது சோவியத் யூனியனில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மசூதிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் பல மசூதிகள், கட்டடக்கலை, கலாசாரம் அல்லது வரலாற்றின் சின்னங்களாகத் திகழுகின்றன. மத குருக்களின் போதனைகளைக் கேட்கவும், மதச் சடங்குகளைச் செய்யவும், மதசம்பந்தமான பண்டிகை நாட்களைக் கொண்டாடவும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான சோவியத் முஸ்லிம் குழுவினர் ஹஜ் யாத்திரை செய்கின்றனர். மதக்கல்விபெற விரும்புவோர் தொன்மை வாய்ந்த புகாரா நகரத்திலுள்ள மிர் அரபு மதரஸா அல்லது தாஷ்கெண்டிலுள்ள முஸ்லிம் 'அகடமி'யில் சேரலாம். அரபு நாடுகளிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு இளம் ஆத்திகர்களை முஸ்லிம் வாரியங்கள் அனுப்புகின்றன.

முஸ்லிம் சமுதாயங்களின் நடவடிக்கைகளை வழிநடத்துகின்ற இந்த முஸ்லிம் வாரியங்கள், தேவையான மதநூல்களை வெளியிடுகின்றன. மத அடிப்படையில் பகைமை அல்லது வெறுப்பைத் தூண்டுவதைச் சோவியத் அரசியல் சட்டம் தடைசெய்கிறது. அரசியல் சட்டத்தின் இந்த ஷரத்து பரிபூரணமாக அமுல்நடத்தப்படுவதை அரசாங்கம் கறாராகக் கண்காணிக்கிறது"

---

## 'பிரதமர் தனது பாதுகாப்புக்கருதி விமானப்படை வாகனங்களை பாவிப்பதில் தடைஇல்லை'

புதுடில்லி, அக் 26

"அரசின் தலைவர் என்ற முறையில் பிரதமர் திரு சரண்சிங்கிற்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டியது அவசியம். எனவே அவர் பாதுகாப்புக் கருதி விமானப்படை விமானங்களைப் பாவிக்கலாம்".

திரு சரண்சிங் ஆந்திரப்பிரதேச சுற்றுப்பயணத்திற்கு விமானப்படை விமானத்தைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த பிரதமந்திரி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர்களான திரு. ஜவஹர்லால் நேரு, திருமதி இந்திராகாந்தி, திரு மொரார்ஜிதேசாய் ஆகியோரும் தமது பாதுகாப்புக்கருதி அரசு முறையல்லாத பயணங்களுக்கும் விமானப்படை விமானங்களைப் பாவித்தார்கள் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ரு)

---

### 'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :........................................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ........................

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?........................

(4) புதிய பிரதமர் யார்?........................

பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

........................................

........................ கையொப்பம் ........................ திகதி:

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
சிவாஜி-கே.ஆர்.விஜயா-சிவகுமார் வாசு நடித்த
**கிரஹப்பிரவேசம்**
(புதிய பிரதி)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சுஜாதா
**லலிதா**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30,
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். — சாவித்திரி
**மகாதேவி**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna) Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p m only
Last Of The Viking

**RAJAH** JAFFNA, A SUPERB THRILLER EVER SCREENED BEFORE
Daily at 10-30 a m. 2-00, 4-30, 7-00, & 9-30 p.m.
An advenger on wheels—
He chases them across the state and wipes them off the roads.
When you push too far, even a peaceful man gets Fighting Mad;
PETER FONDA IN
**FIGHTING MAD**
(F)பைட்டிங் மாட்
(Color by Deluxe)
(Strictly for Adults) (வயது வந்தவர்களுக்கு மட்டும்)

4-வது ஜனத்திரள் வாரம்!
**ஸ்ரீதர்** (யாழ்நகர்)
தினசரி காலே 10-30
பி. ப. 2-30, 6-15, 9 45
தினசரி 4 காட்சிகள்
நடிகர்திலகம் சிவாஜிகணேசன்
நடிப்புச்செல்வி சுஜாதா
விஜயகுமார்,
அறிமுகம் சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா
சுந்தரராஜன் மற்றும் பலர் நடித்த
**தீபம்**
இசை: இளையராஜா (வர்ணக் கலர்)
வெள்ளிவிழாச் சித்திரம்

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642.
ஹவுஸ்புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ்புல்!!!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி, ★ ஸ்ரீகாந்த்,
★ எம். ஆர். ராதா ★ அசோகன் ★ மனோரமா
★ அறிமுகம் கவர்ச்சிக்கன்னி பிரவீணா
**"டாக்ஸி டிரைவர்"**
(வண்ணப் படம்)
அமரர் நடிகவேள் M. R. ராதாவின் பண்பட்ட நடிப்பை, பல ஆண்டுகளின் பின் பார்த்துப் பரவசம்கொள்ளவைக்குமொரு சிறந்த பொழுதுபோக்குச் சித்திரம்.

4-வது ஜனத்திரள் வாரம்
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா பிலிம்சாரின்
**அந்தமான்காதலி**
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)
முக்கிய அறிவித்தல்:- தினசரி மாலை 6-30 மணிக்காட்சி முடிவடைந்தவுடன் பண்டத்தரிப்பு வரை செல்வதற்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## சுருட்டுத் தொழிலாளர் கோரிக்கை:

# நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தொண்டமான் உறுதி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினர் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தித்துறை அமைச்சருக்கு அனுப்பிவைத்த கோரிக்கைக் கடிதத்திற்கு இலங்கைத் தொழிலாளர் சார்பிலே உரிய நடவடிக்கைகளை எடுக்கும், என்று அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் பதிலளித்துள்ளார்.

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர், செயலாளர் கையொப்பமிட்டு அமைச்சருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கேட்கப்பட்டிருந்த கோரிக்கைகள் வருமாறு:

இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை கூட்டுத்தாபனமாக்கவேண்டும்.

அகில இலங்கை ரீதியில் 12,000 சுருட்டுத் தொழிலாளர்களின் தொழிற்சங்க, மற்றும் உரிமைகளையும், நலன்களையும், கூலி, தரம், விலைக்கட்டுப்பாடு, வெளிநாட்டுத் தொடர்பு போன்றவற்றை மேற்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

"தொழிலாளர்களுக்குரிய சேமலாபநிதி தற்பொழுது இல்லை. இது தொழிலாளர்களுக்குப் பாதகமான செயலாகும் எனவே சேமலாபநிதியினைச் சகல தொழிலாளருக்கும் ஏற்படுத்தும் உருவத்தான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொழிலாளர்களுக்கு 1000 சுருட்டுக்களுக்கு 37-50 வழங்கப்படவேண்டும். ஆனால் 1000 சுருட்டுத் தொகையிலக் குறைந்த எண்ணிக்கைப் புத்தகத்தில் 800 ஆகக் காட்டுவதன் மூலம் சம்பளம் குறைகின்றது. இதை வென்றெடுக்க ஆவன செய்யவும்.

தொழில் நிலையங்களை ஒன்றிணைத்துக் கூட்டுத்தாபன நிலைக்குயர்த்தப்பட்டால் பல கோடி ரூபாய்களை அரசுக்கு இலாபமாக ஈட்டித்தரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். (நா)

### 50 ரூபா கூலி உயர்வு ஆராயப்படும்

சுருட்டுத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கூலி உயர்வை அமுல் நடத்துவதுபற்றி ஆராய்வதற்கு சுருட்டுத் தொழிலாளர்களின் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ம் திகதி தாவடியிலுள்ள இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் திரு. முதலியார் தலைமையில் நடைபெறவிருக்கிறது. (க)

### அபராதம்

(பண்டத்தரிப்பு)

சட்ட விரோதமான முறையில் வீடொன்றில் வைத்து வடிசாராயம் காய்ச்சிக்கொண்டிருக்கையில் சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி 250 ரூபா அபராதம் விதித்தார்.

கைப்பற்றப்பட்ட வடிசாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார்.

சங்கானைப் பொலிசார் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்து பண்டத்தரிப்பு செபமாலைமாதா கோவிலுக்கு சமீபமாகவுள்ள வீடு ஒன்றைத் திடீர் சோதனையிட்டபோது அங்குள்ள குடிலில் சட்டவிரோதமாக வடிசாராயம் காய்ச்சிக் கொண்டிருந்த [illegible] என்ற நபரைக் கைது செய்ததுடன், வடிசாராயம் காய்ச்சுவதற்குப் பாவிக்கப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினார்கள். மேற்படி நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் உபகரணங்களை பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டது (கு).

### கிழக்கின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தியால் நல்வாழ்க்கை நெறியால், சமூகசீர்திருத்தக் கருத்துக்களால் நாமென்றென்றும் பின்பற்றக் கூடிய ஒருவழி காட்டியாகி நம் மத்தியில் இருந்து பிரிந்த இப்பெரியாருக்கு நாம் ஒவ்வொருவரும் நம் நெஞ்சில் நினைவுச்சின்னம் நிறுவி அவர் வழி மொழிகளும் மதத்துக்கும் தமிழினத்துக்கும் சேவை செய்வோமாக.

**RIO** Jaffna Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m.
**CONVOY**

வியாபாரம் பக
விளம்பரம் செய்க

FINAL WEEK
**RANEE [Jaffna]** Daily at 10-30 a m., 2-30, 4-30, 7-00 & 9-30 p.m.
After its record breaking run in Colombo now comes to entertain you.
The most eagerly awaited Film.
The Best War Film to be released after a lapse of several years.
**OPERATION DAY BREAK**
(One of the True great adventure story of our time.)
From 4-10-79
**EXORCIST**

**வெலிங்டன்** (சுன்னாகம்)
தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா
**நீதிக்கு தலைவணங்கு**

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். • சரோஜாதேவி
**பணத்தோட்டம்**

தனிநபரோ; நிறுவனங்களோ

# யாழ். மாநகரசபையை கட்டுப்படுத்த முடியுமா?

## சபைக்கு வரும் கேள்வி

[யாழ்ப்பாணம்]

இச்சபையை வேறெந்தத் தனிநபரோ, நிறுவனங்களோ கட்டுப்படுத்த முடியுமா என்ற கேள்வியை, யாழ் மாநகர சபை உறுப்பினரான ஜனாப் மீ. மூ. காசிம், இம்மாதம் 31ம் தேதி நடக்கும் யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக் கும் இக்கூட்டத்திற்கு ஜனாப் மீ. மூ. காசிம், கீழ்க்காணும் கேள்வியை கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

"இச்சபையை வேறெந்த தனிநபரோ, நிறுவனங்களோ கட்டுப்படுத்த முடியுமெனில் யாராம், கட்டுப்படுத்த முடியும் என இச்சபைக்கு அறிவித்தரவும். இல்லையெனில் அவ்வாறு இச்சபையின் நடவடிக்கைகளை தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு இணங்க கட்டுப்படுத்தும் முயற்சிக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க இச்சபைக்கு உரிமையுண்டா?

அமரர் [illegible] முனீஸ்வரன் வீதி [illegible] விளக்கு [illegible] பட்டவர்களை [illegible] கொண்டுவர திரு. எஸ். சி. செல்லத்துரை முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மற்றும் 7 பிரேரணைகளும் இடம்பெற்றுள்ளன. [உ-கு]

ஒரு முத்தலுக்கும் குறைவான பாணை

# 1-25 சதத்திற்கு விற்கும் வர்த்தகர் மீது வழக்கு

[யாழ்ப்பாணம்]

[illegible]

ஒருவர், [illegible] என்று தெரிவித்தார். [உ-கு]

## கராஜ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible]

## அமெரிக்க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible] "ஈழநாடு" [illegible]

## ஸ்கந்தஷஷ்டிவிழா

[யாழ்ப்பாணம்]

[illegible]

[யாழ்ப்பாணம்]

[illegible] [ஏ]

## இருதயத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible] [செ]

## சுழிப்முடிவுகள்

[கொழும்பு]

746-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் உத்தியோக பூர்வமான முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
06 L 0441
ரூ. 1,00,000

இரண்டாம் பரிசு
19 L 0864
ரூ. 40,000

மூன்றாம் பரிசு
16 B 0898
ரூ. 10,000

தலா ரூபா 1,285 சதம் 77 கொண்ட ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 04 A 0611 | 08 A 0779 | 23 H 9408 | 08 J 0780 |
| 20 A 0488 | 23 A 0290 | 30 J 0152 | 22 J 0234 |
| 25 A 0329 | 01 B 0084 | 25 J 0725 | 30 J 0726 |
| 13 B 0301 | 14 B 0353 | 04 K 0063 | 08 K 0145 |
| 15 B 0642 | 05 C 0211 | 25 K 0534 | 25 K 0645 |
| 22 C 0513 | 22 C 0698 | 28 K 0352 | 02 M 0924 |
| 25 C 0336 | 02 D 0311 | 24 M 0495 | 18 N 0205 |
| 03 D 0768 | 04 D 0240 | 20 N 0981 | 23 N 945 |
| 04 D 0466 | 06 D 0841 | 27 N 0467 | 05 O 0060 |
| 10 D 0764 | 14 D 0810 | 10 O 0222 | 15 O 0461 |
| 18 D 0490 | 21 D 0435 | 24 O 0241 | 24 O 0325 |
| 25 D 0445 | 16 B 0103 | 25 O 0061 | 25 O 0357 |
| 03 F 0771 | 15 F 0508 | 02 P 0495 | 03 P 0472 |
| 21 F 0773 | 22 F 0043 | 06 P 0114 | 19 P 0903 |
| 30 G 0638 | 29 G 0468 | 22 P 0914 | 24 P 0299 |
| 08 H 0479 | 11 H 0709 | 26 P 0880 | 05 Q 0282 |
| 18 H 0626 | | 15 Q 0495 | |
| | | 25 Q 0012 | 29 Q 0830 |
| | | 01 R 0302 | 09 R 0769 |
| | | 12 R 0.54 | 15 R 0170 |
| | | 30 R 0341 | 31 R 0410 |
| | | 31 R 0924 | 13 S 0634 |
| | | 16 S 0921 | 19 S 0705 |
| | | 31 S 0826 | 22 T 0027 |
| | | 17 U 0600 | 03 V 0623 |
| | | 12 V 0146 | 28 V 0423 |
| | | 01 W 0121 | 15 W 0793 |
| | | 22 W 0531 | 10 X 0768 |
| | | 14 X 0521 | 15 X 0268 |
| | | 28 X 0797 | 08 Y 0419 |
| | | 16 Y 0010 | 26 Y 0332 |
| | | 04 Z 0638 | 14 Z 0109 |
| | | 15 Z 0287 | 18 Z 0465 |
| | | 26 Z 0528 | 31 Z 0399 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

## எதிரிகளுக்கு..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible]

## 4 உதவி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[illegible]

## ஒருவர்பலி!

[யாழ்ப்பாணம்]

[illegible]


# 'வீர சங்கிலியன்'

## நாளைய வாரமலரை படிக்கத் தவறாதீர்கள்

0 யாழ்ப்பாண இராச்சியத்தின் நல்லூர் அரண்மனையில் நஞ்சூட்டிய கொலைகளைப் புரிந்தவர் யார்?

0 பழி ஓரிடம், பாவம் ஓரிடமா?

இதற்கு விடைகாண நாளைய ஈழநாடு வாரமலரில் தீப்பொறி ஆசிரியர் திரு. அந்தனி சில் எழுதும் தொடர்கட்டுரையைப் படிக்கத் தவறாதீர்கள்.



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No: 49, Telegram Eelanadu T'Phone: 389.